மேலான வாழ்க்கைக்கான

அறிக்கை

“என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.”
“கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.”
(2 நாளகமம் 7:14; கொலோசேயர் 1:27)

கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் பெருமையை நிராகரித்து கிறிஸ்துவின் தாழ்மையை நான் தரித்துக் கொள்கிறேன்.[1]

விரோதத்தை நீக்கி கிறிஸ்துவின் மனரம்மியத்தை ஏற்றுக்கொள்கிறேன்.[2]

பேராசையை ஒழித்து கிறிஸ்துவின் தாராளமனப்பான்மையை ஏற்றுக்கொள்கிறேன்.[3]

பெருந்தீனியை விட்டு கிறிஸ்துவில் ரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்கிறேன்.[4]

இச்சையை ஒழித்துக் கிறிஸ்துவின் தூய்மையை நான் கடைப்பிடிக்கிறேன்.[5]

கோபத்தைத் தவிர்த்து கிறிஸ்துவின் அன்பை கடைப்பிடிக்கிறேன்.[6]

சோம்பேறித்தனத்தை நீக்கி கிறிஸ்துவின் ஊழிய மனப்பான்மையைக் கடைப்பிடிக்கிறேன்.[7]

புறங்கூறுதலை ஒழித்து கிறிஸ்துவின் மூலம் வரும் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன்.[8]

[1]யாக்கோபு 4:6
அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.

[2]பிரசங்கி 91:9–11
1 தீமோத்தேயு 6:6
மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், பயன்படும் எல்லாக் கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.

[3]எபேசியர் 5:5
நீதிமொழிகள் 21:26
விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. அவன் நாள்தோறும் ஆவலுடன் இச்சிக்கிறான்; நீதிமானோ பிசினித்தனமில்லாமல் கொடுப்பான்.

[4] நீதிமொழிகள் 121:1–2,5
பிலிப்பியர் 4:12
மதுபானப்பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.

[5] யோபு 31:1; மத்தேயு 5:6
என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி? நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

[6] நீதிமொழிகள் 15:1; 19:11;
1 கொரிந்தியர் 13:14
மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது;

[7] ரோமர் 12:11
அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.

[8] லேவியராகமம் 19:16
1 கொரிந்தியர் 4:12
உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாயாக; எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்.

© Copyright Derek Prince Ministries-Asia/Pacific
For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au